கூட்டத்தில் சங்கத்தின் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகளை எடுத்துக்கூறி விழிப்புணர்வு படங்களையும் திரையிட வேண்டும்.

கூட்டத்தின் முடிவில் உறுப்பினர்கள் சேர்க்கைப் படிவத்தை மாணவர்களிடம் வழங்கி அவர்கள் கையொப்பமிட்ட பின், அதனை உறுப்பினர் பதிவேட்டில் பதிய வேண்டும்.

ஒரு கல்லூரியில் தன்னார்வ உறுப்பினர்களின் குறைந்தபட்சம் எண்ணிக்கை 100-லிருந்து அதிகபட்சம் 500 வரை மாணவர்களை சேர்க்கலாம். முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

## இனி செல்லும் பாதை

செந்நாடா சங்கம், இளைஞர்களுக்கு, தங்கள் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் குறிக்கோள்களை ஒளிவு மறைவின்றி கலந்துரையாட, பாலுணர்வு, பாலியல், அன்பு, நட்பு பற்றி கூச்சமோ, தயக்கமோ இன்றி விவாதிப்பதற்கான சூழலை உருவாக்கி, இளைஞர்களின் நேர்மறை ஆற்றலை நெறிப்படுத்தும் ஊக்கியாக இருக்க வேண்டும்.

உறுப்பினர்கள் தங்களின் சங்கச் செயல்பாடுகள் மூலம் சமுதாயத்திற்குத் தாங்கள் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றியுள்ளோம் என்ற மன நிறைவோடு இச்சங்கத்தின் மூலம் தான் பெற்ற அறிவின் பயனையும் உணர வேண்டும்.

இளைஞர்களின் வாழ்க்கை அவர்களின் கரங்களில் தான் உள்ளது என்ற தன்னம்பிக்கை வளர்த்தல், எச்.ஐ.வி /எய்ட்ஸ் குறித்த பொய் செய்திகளையும் தவறான கருத்துக்களையும் களைதல்.

உடல் மற்றும் மனதை தன் ஆளுமைக்குள் கொண்டு வரும் ஆற்றல் போன்ற திறன்கள், செந்நாடா சங்கங்கள் மூலம் இளைஞர்களிடம் ஊற்றெடுக்க வேண்டும்.



# செந்நாடா சங்கம்



**வாழ்க்கை கொண்டாடுவதற்கே**

**வாருங்கள் இணைந்து கொண்டாடுவோம்**

* Download the "NACO AIDS APP"
* Toll Free : 1097

இரத்ததானம் செய்ய அனுகவும்

அரசு பொது மருத்துவனை, புதுவை (0413-2225366, 2275512)
அரசு மருத்துவனை, காரைக்கால் (04368-227752)
ஜிப்மர் மருத்துவனை, புதுவை (0413- 2274812)


**பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுபாட்டு சங்கம்**
புதுச்சேரி - 605 001.
தொலை பேசி : 0413 - 2260160, 2337000
மின் அஞ்சல் : pondicherrysacs@gmail.com


கல்வி நிறுவனங்களில் செயல்படும் செந்நாடா சங்கம், கல்லூரி மாணவர்களிடையே எச்.ஐ.வி. தொற்று குறித்து உணரச் செய்கிறது. எச்.ஐ.வி. மற்றும் பால்வினைநோய் பற்றி தெளிவான புரிதலை அறிய வைக்கும். இச்சங்கங்கள், இதில் தன்னார்வத்தோடு சேரும் உறுப்பினர்கள் மூலம் கல்லூரி வளாகத்தின் உள்ளேயும், வெளியேயும் எச்.ஐ.வி. தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பெரிதும் உதவுகிறது. 15 முதல் 25 வயது வரையுள்ள மாணவர்களுக்கு வாழ்வியல் திறன்கள் மற்றும் எச்.ஐ.வி குறித்து முழுமையான தகவல்களை வழங்கி, தங்களையும், தங்களை சுற்றியுள்ளோரையும் எச்.ஐ.வியிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் திறனையும் வளர்க்கிறது.

பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தால் உருவாக்கப்பட்ட இந்த செந்நாடா சங்கங்கள், 2005 - ஆம் ஆண்டு ஜுன் மாதம் துவங்கப்பட்டு, அனைத்து கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## செந்நாடா சங்கங்களின் குறிக்கோள்கள்

1. பாலியல், பாலுறவு மற்றும் எச்.ஐ.வி & எய்ட்ஸ் தொடர்பான முறையான தகவல்களை வழங்குதலும், எச்.ஐ.வி பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்துவதன் மூலமும், மாணவர்கள் எச்.ஐ.வி பற்றி உணர்ந்து செயல்பட்டு எச்.ஐ.விலிருந்து தங்களைக் பாதுகாத்துக் கொள்ள வழிவகை செய்வது.

2. இளைஞர்களிடையே தலைமைப் பண்பினை மேம்படுத்தி, தலைமை ஏற்கும் திறனை உருவாக்குவது. மேலும், செயற்குழுக்களை ஏற்படுத்தி இளைஞர்களை ஒத்த கல்வியாளர்களாகவும், சமூக மாற்றத்தின் காரணிகளாகவும் ஆயத்தப்படுத்தி சமுதாயத்தைப் பயன்படுத்துவது.

3. இளைஞர்களை தன்னார்வத்தோடு முன்வந்து இரத்த தானம் செய்ய ஊக்குவிப்பது.

4. எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்வோர், திருநங்கைகளின் சவால்கள், தேவைகள், உரிமைகள் ஆகியவற்றினை அறிவதற்கான வாய்ப்பு அளிப்பதால் அவர்களை பற்றிய தவறான கருத்துகளை களையவும் இச்சங்கங்கள் உதவுகிறது. இது சமுதாயத்தில் அவர்களை எதிர்த்து நடக்கும் ஒதுக்குதல் மற்றும் புறக்கணித்த -லிருந்து நலமாக வாழ ஊக்குவிக்கிறது.

## செந்நாடா சங்கங்களின் முக்கிய செயல்பாடுகள்

- "வாழ்க்கையை கொண்டாடுவோம்" பயிற்சி மேற்கொள்வது.
- கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கு பயிற்சி பெற்ற சிறப்பு அழைப்பாளர்கள்,

  பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்ட அதிகாரி மற்றும் தன்னார்வ பரிசோதனை மைய ஆலோசகர், இரத்த வங்கி மருத்துவர், ஆலோசகர் மற்றும் திருநங்கை கூட்டமைப்பு அங்கத்தினர் ஆகியோர்கள் பங்கு பெற அழைப்பது.
- சக மாணவர் பயிற்றுனர் பயிற்சி அளிப்பது.
- எச்.ஐ.வி சேவை மையங்களை பார்வையிடல்
- தன்னார்வ இரத்ததான முகாம் ஒருங்கிணைத்தல்.

## செந்நாடா சங்கத்திற்கான தேவை

வளர் இளம் பருவத்தில் உடல் மற்றும் உணர்வில் திடீரெனத் தோன்றும் மாற்றங்களினால் ஏற்படும் குழப்பங்களை தெளிவுபடுத்துதல்.

பாலியல் தொடர்பான காலம் காலமாக வேரூன்றியுள்ள சமூக நம்பிக்கைகள், மதிப்பீடுகள் முதலியவை இளம் வயதினரிடையே எதிர்மறை சிந்தனைகளுக்கு சரியான புரிதலும், தீர்வும் தருகிறது.

வளர் இளம் பருவத்தினரின் மனம் மற்றும் சமூகத் தேவைகளை, குறிப்பாக பாலியல் பாலுறவு தொடர்பான தகவல்கள் முறையாகக் கிடைக்கவும் இச்சங்கம் உதவுகிறது.

நம் சமூகக் கோட்பாடுகள், இளம் பருவத்தினர் தங்களின் வளர் இளம் பருவத்தினர்க்கான சுகாதார பிரச்சனைகள் மற்றும் எச்.ஐ.வி & எய்ட்ஸ் குறித்து அறிந்து கொள்வதற்கு இச்சங்கங்கள் வழிவகுக்கிறது .

போதை மற்றும் மதுப் பழக்கங்கள், இளம் பருவத்தினர் பாலியல் உறவு குறித்து சரியாகச் சிந்தித்து முடிவெடுக்க இச்சங்கங்கள் உதவுகிறது.

ஆண், பெண் இடையேயான நடத்தை மாற்றத்தைக் கொண்டு வர உதவுகிறது செந்நாடா சங்கங்கள்.

இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான முறையில் நெறிப்படுத்துவதோடு செந்நாடா இயக்கம் மாணவர்களை மிகச் சிறந்த ஒத்த கல்வியாளர்களாகவும் உருவாக்க முடிகிறது. இவர்கள் மூலம் இன்று முக்கியமாகத் தேவைப்படும். எச்.ஐ.வி / எய்ட்ஸ் விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் திறனையும் இச்சங்கம் கொண்டுள்ளது.

## செந்நாடா சங்கம் துவங்குவது எப்படி?

கல்லூரி முதல்வர் மற்றும் செந்நாடா சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர்களை ஆலோசித்த பிறகு அனைத்து துறைகளையும் அணுகி மாணவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

